# வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

# இரண்டாம் தவணைப்பரீட்சை - 2017

| | | |
|---|---|---|
| **தரம் - 6** | **வரலாறு** | **நேரம் : 2மணித்தியாலம்** |
| **சுட்டெண் :** | | **புள்ளி** |

gFjp - I

**01. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

*01.* நாம் அனைவரும் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்

*1.* நீக்ரொயிட் *2.* ஹோமோசேபியன் *3.* கொக்கசொயிட் *4.* ஒஸ்ரலொயிட்

*02.* உயிரினங்கள் எங்கே முதலில் தோற்றம் பெற்றன.

*1.* தரையில் *2.* ஆகாயத்தில் *3.* நீரில் *4.* கடலில்

*03.* முதல் நகரவாசிகள் என்ற பெயரால் அறிமுகமானவர்கள்

*1.* செல்வந்தகிராமவாசிகள் *2.* ஏழைகள் *3.* விவசாயி *4.* கிராம ஏழைகள்

*04.* எண்ணுவதற்கு எமக்குப் பழக்கிய பழைய நாகரிகத்தவர்கள் யாவர்?

*1.* சிந்து நதி நாகரித்தனர் *2.* எகிப்திய நாகரித்தவர்

*3.* சீனா நாகரித்தவர் *4.* மொசபத்தேமிய நாகரித்தவர்

*05.* திசையறி கருவி யாரால் அறிமுகம் செய்யப்பட்டது

*1.* எகிப்தியர் *2.* சீனர் *3.* ஜப்பானியர் *4.* கிரேக்கர்

*06.* இறப்பர் பந்து எந்த நாகரிகத்துக்கு உரியது.

*1.* எகிப்து *2.* சிந்து நதி *3.* மாயா *4.* சீனா

*07.* மொசப்பத்தேமியா நாகரிகம் நிலவிய காலப்பகுதி

*1.* கி.மு 3100 - 2900 *2.* கி.மு 3200 - 2800 *3.* கி.மு 2800 - 3000 *4.* கி.மு 3000 - 4000

*08.* “ஆப்பு” எழுத்துக்களை எழுத பயன்பட்டவை எவை?

*1.* மரப்பலகை *2.* களிமண் தட்டுக்கள் *3.* கற்கள் *4.* தரை

*09.* சிந்து நதி நாகரிகம் நிலவிய காலப்பகுதி

*1.* கி.மு 2000 - 30000 *2.* கி.மு 1600-2100 *3.* கி.மு 2600 - 1990 *4.* கி.மு 3000 - 3500

*10.* ஆபிரிக்காக் கண்டத்தினூடாக பாய்ந்து செல்லும் நதி.



kalvi.lk

1. நைல் நதி 2. சிந்து நதி 3. குவாங்கோ நதி 4. மஞ்சள் நதி

11. "மம்மி" முறையை உலகிற்கு அறிமுகம் செய்து வைத்த நாகரித்தவர்.
   1. மாயா 2. எகிப்து 3. மொசப்பத்தேமியா 4. சிந்து நதி

12. விஜயன் உள்ளிட்ட குழுவினர் இலங்கைக்கு வந்த காலப்பகுதி.
   1. கி.மு 544 2. கி.மு 454 3. கி.மு 644 4. கி.மு 524

13. மலைப் பிரதேசங்களில் காணப்பட்ட சமவெளிகள் எவ்வாறு அழைக்கப்பட்டன.
   1. முகடு 2. சமநிலம் 3. சமவெளிகள் 4. பீடபூமி

14. எமது நாட்டின் வரலாற்றைக் கற்பதற்கு உதவும் நூல் எது?
   1. சூளவம்சம் 2. மகாவம்சம் 3. தீபவம்சம் 4. மகாபாரதம்

15. குவேனி எக்குலத்தைச் சேர்ந்த பெண்.
   1. இயக்கர் 2. நாகர் 3. ஆரியர் 4. இடையர்

16. விஜயன் குழுவினர் இலங்கையில் வந்திறங்கிய இடம்.
   1. கொடவாய 2. திருகோணமலை 3. தம்பபண்ணி 4. கொழும்பு

17. உபதிஸ்ஸகம குடியேற்றம் யாரால் அமைக்கப்பட்டது.
   1. விஜயன் 2. அநுராத 3. உபதிஸ்ஸ 4. உருவெல

18. எகிப்தின் தலைநகரம் யாது?
   1. கெய்ரோ 2. பஹ்ரன் 3. டோக்கியோ 4. இலண்டன்

19. மொசப்பத்தேமியா நாகரிகத்தில் பூமிக்கு அதிபதியான கடவுள் எவ்வாறு அழைக்கப்பட்டார்.
   1. அனு 2. என்கிகி 3. என்லிலி 4. சிகுராத்

20. 'உருவெலகம' அமைந்துள்ள நதிக்கரை எது?
   1. மல்வத்து ஓயா 2. கலாஓயா 3. தெதுறு ஓயா 4. கல் லோயா

(20 × 2 = 40)

gFjp - II



kalvi.lk

**01. முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

*01. 1.* வரலாறு பாடத்தில் வகுப்பறையில் நீர் மேற்கொண்ட இரு கணிப்பீடுகளைக் குறிப்பிடுக.


*2.* இக்கணிப்பீட்டிற்கு ஆசிரியரால் வழங்கப்பட்ட தர உள்ளீட்டுப் பொருட்கள் எவை?

*3.* இக்கணிப்பீட்டின் மூலம் நீர் பெற்றுக் கொண்ட நன்மைகள் 3 குறிப்பிடுக.

*4.* இக்கணிப்பீட்டை மேற்கொள்ளும் போது எதிர்நோக்கிய பிரச்சினைகள் 3 தருக.

(4 × 3 = 12)

*02.* பின்வரும் இடங்களை உலகப்படத்தில் குறிக்க



*4.* ஆபிரிக்கா *5.* சீனா *6.* அவுஸ்திரேலியா

(6 × 2 = 12)

*03. 1.* ஹோமோசேபிய மனிதனின் நான்கு இனப் பிரிவுகளும் எவை?

*2.* நகரங்கள் எவற்றை உள்ளடக்கி இருக்கின்றன?

*3.* உலகில் நிலவிய புராதன நாகரிகங்கள் எவை?

*4.* சீனர்களால் கண்டு பிடிக்கப்பட்டவை எவை? (4 × 3 = 12)

*04. 1.* மொசப்பத்தேமியா நாகரிகம் எந்த நதிப்பள்ளத்தாக்குகளில் வளர்ச்சி அடைந்தது?

*2.* நாகரிகத்தில் பயிரிடப்பட்ட முக்கிய தானிய வகைகள் எவை?



kalvi.lk

3. மொசப்பத்தேமியா மக்கள் எவற்றை தெய்வமாக கருதி வழிபட்டனர்?

4. கடவுள் குழுவின் தலைவனாகத் திகழ்ந்தவர் யார்? (4 × 3 = 12)

05. 1. மொசப்பத்தேமிய சமூகத்தில் காணப்பட்ட நான்கு பிரிவுகளும் எவை?

2. சிந்துவெளி நாகரிகத்தில் காணப்பட்ட பிரதான இரு நகரங்களும் எவை?

3. எகிப்திய நாகரிகம் நீண்டகாலமாக எந்த பரம்பரையைச் சேர்ந்த அரசர்களால் ஆட்சி செய்யப்பட்டது?

4. எந்த மன்னனின் மம்மியின் முகத்தில் தக்கத்திலான முகமூடி வைக்கப்பட்டுள்ளது?

(4 × 3 = 12)

06. 1. இலங்கையில் ஆரம்பகால மனிதன் அன்றாடத் தேவைகளுக்காக பயன்படுத்திய உபகரணங்கள் 3 குறிப்பிடுக.

2. ஆரம்பகால மனிதன் உணவுக்காக வேட்டையாடிய உயிரினங்கள் 3 குறிப்பிடுக.

3. வேட்டை யுகத்தில் மனிதன் வசித்ததாகக் கருதப்படும் குகைகளில் ஒன்று யாது?

4. வேட்டை யுகத்தில் மனிதன் எவ்வாறு வாழ்ந்தான்?

(4 × 3 = 12)

Education கல்வி අධ්‍යාපන

# GRADE 6,7,8

# STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
| --- | --- |
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.





கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி அධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்தொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page